RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt224s1940

# சேக்கிழாரின் பெரியபுராணத்தில் மனுநீதிச் சோழனின் அறக் கோட்பாடு

**அ. கோமதி ஜெயம் [அ, *]**

[அ] தமிழ்த்துறை, தமிழ்நாடு இசைக் கல்லூரி, கோயம்புத்தூர்-641021, தமிழ்நாடு, இந்தியா

# The Moral Doctrine of Manuneethi Chola in Sekkizhar's Periyapuranam

**A. Gomathi Jayam [a, *]**

[a] Department of Tamil, Tamil Nadu Government Music College, Coimbatore–641021, Tamil Nadu, India

* Corresponding Author: gomathiveena63@gmail.com

Received: 03-08-2022
Revised: 28-09-2022
Accepted: 07-10-2022
Published: 10-12-2022

Check for updates

## ABSTRACT

Manuneeti Chola's past history is that a king should rule without any sense of self-interest by treating all beings equally without fail in justice. The rule of Manuneeti Chola is a great example of the democratic, communist, and other modes of governance of many countries of the world, both in the present and in the future. Purity of mind comes from penance. The purity of action comes from action. Good deeds come from virtue. Punishment for a mistake done unknowingly is the justice that the power of God implies. Morality is the true worship of God. This article contains an account of the events of the great king Manuneeti Chola who lived his life without missing morality. Sekkizhar's Periyapuranam, written in the 12th century, describes the art, etiquette, culture, discipline, and way of life of the Tamils. The purpose of this article is to explain the divine virtues of Manuneeti Chola. In this article, the book Periyapuranam, the author of the book, and the moral doctrine of Manu Neethi Chola, who originated in the Tamil Chola tradition, which is the epitome of world justice, are analyzed.

**Keywords:** Periyapuranam, Manuneethi Chola, Moral Doctrine,

## முன்னுரை

ஒரு மன்னன் நீதி தவறாமல் நெறிமுறையோடும் அனைத்து உயிர்களையும் சமமாக பாவித்து சுயநலமில்லாமல் ஆட்சி நடத்த வேண்டும் என்பதற்கு மனுநீதி சோழனின் கடந்த கால வரலாறு உலகத்தின் பல நாடுகளிலின் ஜனநாயக, கம்யூனிச மற்றும் பிற ஆட்சி முறைகளுக்கும் நிகழ்காலத்திலும் திலும் எதிர் காலத்திலும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

## பெரியபுராண நூல் குறிப்பு மற்றும் ஆசிரியர் குறிப்பு

ஐந்தாவது வேதம் என்று அழைக்கப்படும் திருத்தொண்டர் புராணத்தை இயற்றியவர் அருண்மொழித் தேவர் என்ற இயற்பெயர் கொண்ட சேக்கிழார் ஆவர். இதில் 63 நாயன்மார்களின் வாழ்கை வரலாறு மற்றும் திருமலை, திருநாடு, திருநகர், திருக்கூட்டம் என்ற தலைப்புகளில் 2 காண்டங்களையும், 13 சருக்கங்கள் அடங்கிய 4286 விருத்தப்பாக்களாக இயற்றப்பட்டுள்ளது. தேவார மூவரில் ஒருவரான சுந்தரர் எழுதிய திருத்தொண்டர் தொகையையும், தேவாரத்தைத் தொகுத்த நம்பியாண்டர் நம்பி இயற்றிய திருத்தொண்டர் திருவந்தாதியையும் அடிப்படையாகக் கொண்டு விரிவாக எழுதப்பட்டுள்ளதால் இது விரிநூல் என்று அழைக்கப்படுகின்றது. இந்நூல் ஆசிரியர் தொண்டை மண்டலத்தில் புலியூர் கோட்டத்தில் குன்றத்தூர் என்னும் ஊரில் (1113-1150) 12ஆம்

நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர். சோழநாட்டை ஆண்ட அநபாய குலோத்துங்க சோழ மன்னனின் அரசவையில் அமைச்சராக விளங்கினார்.

அநபாயச் சோழன் திருத்தக்க தேவர் எழுதிய சீவகசிந்தாமணியைப் படித்து சமண சமயத்தில் ஈடுபாடு கொண்டிருந்ததால் வருந்திய சேக்கிழார் சிவனின் சைவ சமய பெருமைகளை எடுத்துரைத்தார். மன்னன் சீவகசிந்தாமணியை விட மனதைக் கொள்ளை கொள்ளும் ஒரு காப்பியத்தை இயற்றுங்கள் என்று கூறவும் சேக்கிழார் சிதம்பரம் நடராஜர் கோவிலுக்குச் சென்று இறைவனிடம் நான் எழுதும் இந்தப் புராணத்திற்கு முதலடி எடுத்துக் கொடுக்க வேண்டுமென வேண்டி நிற்க உலகெல்லாம் என்ற சொல் வானொலி இறைவாக்காக ஒலித்தது இதனை முதலடியாகக் கொண்டு சேக்கிழார் பனிரெண்டாம் திருமுறையாகிய ஞான நூலை இயற்றி முடித்தார். 3000 தில்லை வாழ் அந்தணர்கள் முன்னிலையில் சிதம்பரம் கோயில் ஆயிரங்கால் மண்டபத்தில் அரங்கேற்றம் செய்யப்பட்டது.

அரங்கேற்றம் செய்து முடிக்க ஒரு வருட காலம் (365 நாட்கள்) ஆனது. இதனால் மகிழ்ந்த அநபாய சோழன் சேக்கிழாரை யானை மீது ஏற்றி கௌரவித்து உத்தம சோழ பல்லவன் மற்றும் தொண்டர் சீர்பரவுவார் என்ற பட்டங்களை வழங்கி கௌரவித்தார். தமிழ்நாட்டுக் கோயில்கள் ஆட்சிமுறை, இசை, இசைக் கருவிகள் பற்றியும் தமிழக மக்களின் வாழ்வியல் முறைகளைத் தொகுத்துக் கூறியிருப்பதால் வரலாற்று ஆசிரியர்கள் இதனை வரலாற்று நூல், தேசிய இலக்கியம் என்றும் கூறியுள்ளனர்.

மற்ற இந்திய இதிகாச புராணங்கள் எல்லாம், விண்ணிலிருந்து மண்ணிற்கு வந்தவர்களைப் பற்றி கற்பனை கலந்து கூறப்பட்டதாகும். ஆனால், பெரியபுராணம் மண்ணிலிருந்து விண்ணிற்கு சென்ற நாயன்மார்களின் உண்மை வரலாற்றை எடுத்துரைக்கும் தமிழ் வேதமாகும்.

## மனுநீதிச் சோழனின் அறக்கோட்பாடு

சேக்கிழார் பெருமான் திருமலை (இமயமலை) திருநாடு (காவிரிபாயும் சோழநாடு) பற்றிக் கூறி மூன்றாவதாகப் பெரும் வளம் கொழிக்கும் சோழநாட்டின் பழமையான நகரங்களில் ஒன்றான இலக்குமி தேவி வழிபட்ட சிவஸ்தலமான அப்போதைய சோழ நாட்டின் தலைநகரமான திருவாரூர் பற்றி

"வேத ஓசையும் வீணையின் ஓசையும்

சோதிவானவர் தோத்திர ஓசையும்

மாதர் ஆடல் மணிமுடி வோசையும்

கீத ஓசையும் மாய்க்கினர் வுற்றவே"

என்று சிறப்பாகப் பாடியுள்ளார் (Thiruppanandal, 1950). இதைப் போல் திருவாரூர் நகரத்தின் சிறப்பையும், சோழநாட்டை மக்களின் குறைத் தீர்க்க ஆராய்ச்சி மணிகட்டி ஆட்சி செய்த மனு நீதிச் சோழன் என்ற மன்னனின் பெருமையையும் அவனது அறக்கோட்பாடுகள் பற்றியும் 50 பாடல்களில் திருநகர் சிறப்பு என்ற தலைப்பில் பாடியுள்ளார்.

"மண்ணில் வந்தரு மன்னுயிர் கட்கெலாம்

கண்ணும் ஆவியும் ஆம்பெருங் காவலின்" (Thiruppanandal, 1950)

"செற்றம் நீக்கிய செம்மையின் மெய்ம்மனும்

பெற்ற நீதியும் தன்பெயர் ஆக்கினன்"

நாட்டில் உள்ள அனைத்து உயிர்களையும், தன் உயிரைப் போன்றும் கண்மணி போன்றும் பாதுகாத்து அறம், பொருள், இன்பம் என்ற அறநெறியில் நீதிபரிபாலனம் செய்து நல்லாட்சி நடத்தினான். வெகு நாட்கள் பிள்ளைப் பேறு இல்லாமல் இருந்த அரசனுக்கு தவத்தின் பலனாகச் சிவனின் அருளால் ஒரு மகன் பிறந்தான் (Sekkizhar, 2022). வீதிவிடங்கன் என்று பெயர் கொண்ட அரசகுமாரனுக்குரிய

அனைத்து கலைகளையும் கற்றுத் தேர்ந்த பக்தி நெறியிலும் வளர்க்கப்பட்டான். ஒரு நாள் வீதிவிடங்கன் அரண்மனையில் இருந்து பல சேனைகளும் தன்னைச் சூழ்ந்து வர, மங்கல பாடகர்கள் வாழ்த்தொலி பாட முரசுகளும் சங்குகளும் முழங்க மாடவீதியின் வழியாகக் குதிரைகள் பூட்டியத் தேரை வேகமாக ஓட்டி வீதி உலா சென்று கொண்டிருந்தான்.

அப்போது பசுங்கன்று ஒன்று கூட்டத்தைக் கண்டு மிரண்டு அங்குமிங்கும் ஓடி எதிர்பாராத விதமாக வீதிவிடங்கனின் தேர்ச்சக்கரத்தில் குறுக்கே விழுந்தது. பலமுறை முயன்றும் குதிரைகளின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியாததால் கன்றானது தேர்ச்சக்கரத்தில் அகப்பட்டு துடித்து இறந்தது. வீதிவீடங்கன் கன்றின் தாய்ப்பசு படும் துயரத்தைக் கண்டு வருந்தி அழுது தன்னால் தன் தந்தைக்கு பெரும்பழி வந்ததே என்று கலங்கினான். தான் செய்த தவறுக்கு என்ன பரிகாரம் செய்யலாம் என்று வேதவிற்ப்பன்னர்களை காணச் சென்றான். கன்றை இழந்த தாய்ப்பசு அங்குமிங்கும் அலைந்து மனுநீதிச் சோழன் மக்களின் குறைத் தீர்க்க அரண்மனையில் கட்டப்பட்டிருந்த ஆராய்ச்சி மணியைத் தன் கொம்பினால் ஆட்டி மணியொலி எழுப்பியது. இதனைச் சேக்கிழார் கீழ்க்கண்ட பாடலின் மூலம் பதிவிட்டுள்ளார்.

"மன்னுயிர் காக்கும் செங்கோல் மனுவின் பொற்கோயில் வாயில்

பொன்னணி மணியைச் சென்று கொட்டினால் புடைத்த தன்றே"

வெகுநாட்களாகக் கேட்காதிருந்த மணியின் சத்தத்தைக் கேட்டு மன்னன் பதறி ஆராய்ச்சி மணி கட்டப்பட்டிருந்த இடத்திற்கு வந்து கண்ணீருடன் நின்ற பசுவைப் பார்த்து அதிர்ந்து நடுங்கினார் (Thiruppanandal, 1950). அமைச்சர்களில் ஒருவர் நடந்த விடயத்தை மன்னனுக்கு விளக்கினார். சொல்லொண்ணத் துயரத்தை அடைந்த மன்னர் அமைச்சரவையைக் கூட்டி தன் மகன் செய்த குற்றத்திற்கான தண்டனைப் பற்றி ஆலோசனைக் கேட்டார். வேத விற்பன்னர்களிடம் இதற்கு பரிகாரம் உள்ளதாகக் கூறிய அமைச்சர்களின் ஆலோசனையை நிராகரித்து தாய் பசுவிற்கு நீதி கிடைக்க வேண்டுமெனில் வீதிவிடங்கனையும் தேர்ச்சக்கரத்தில் ஏற்றி கொல் வீராக என்று உபயகுலமாலன் என்ற அமைச்சருக்கு ஆணையிட்டார். அமைச்சர் அரச கட்டளையை நிறைவேற்ற மனமில்லாமல் தன்னுயிரை நீத்தார். எனவே, மனுநீதிச் சோழன் தான் பெற்ற ஒரே மகனைக் கன்று இறந்த அதே இடத்தில் படுக்க வைத்து அவன் மீது தேரை ஏற்றிக் கொன்று பசுவிற்கு நீதி வழங்கினார், இதனைச் சேக்கிழார்

"ஒரு மைந்தன் தன் குலத்துக்குள்ளான் என்பதும் உணரான்

தர்மம் தன் வழிசெல்கை கடனென்று தன் மைந்தன்

மருமம் தன் தேராழி உற ஊர்ந்தான் மனுவேந்தன்

அருமந்த அரசாட்சி அரிதோ!"

என்று வியந்து பாடியுள்ளார் (Thiruppanandal, 1950). நீதி வழுவாத கருணை வேந்தனின் இச்செயற்நெறி கண்டு மன்னகத்தர்கன் கண்ணீர் மழைப் பொழிந்தனர், வானோர்கள் பூமழை சொரிந்தனர், சிவபெருமான் காளை வாகனத்தில் இறைவியோடு காட்சி தந்தார், உடனே பசுவின் கன்று மீண்டும் உயிர்ப் பெற்றது, வீதிவிடங்கனும், அமைச்சரும் ஒரே நேரத்தில் உயிர் பெற்று எழுந்தனர்.

மனுநீதிச் சோழனின் நினைவாகத் திருவாரூரில் பிற்கால சோழ மன்னர்களால் அமைக்கப்பட்ட மண்டபமும் கல்லால் ஆன தேரும் நீதியின் நினைவுச் சின்னங்களாக விளங்குகின்றன.

மேலும் திருவாரூர் கோயிலின் இரண்டாம் பிரகாரத்தில் தென்புற மதிலில் கி.பி.1123ஆம் ஆண்டு விக்கிரம சோழனால் அமைக்கப்பட்ட ஒரு கல்வெட்டில் மனு நீதி சோழனின் அமைச்சர் உபயகுலாமலனின் வம்சாவழியைச் சேர்ந்த சந்திரசேகரன் ஆதிவிடங்கன் என்பவருக்கு மாளிகைக் கட்டிக் கொடுத்ததாகச் செய்தி பொறிக்கப்பட்டுள்ளது.

## முடிவுரை

குற்றங்கள் செய்ததை மறைக்க நினைக்கும் உலகத்தவருக்கு மனுநீதி சோழனின் அறக் கோட்பாடு ஒரு சிறந்த பாடமாகும். சென்னை உயர்நீதி மன்றத்தில் தமிழர்களின் நீதிமுறை சார்ந்த பெருமைக்கு அடையாளமாக மனுநீதி சோழன் சிலை அமைக்கப்பட்டுள்ளது. மனு நீதி சோழனின் ஆராய்ச்சி மணி கட்டி மக்கள் குறை தீர்த்தார்.அதை பின்பற்றி ஒவ்வொரு மாதமும், நமது நாட்டின் தலைமைச் செயலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்க்கும் மனு நீதி நாள் கடைபிடிக்கப் படுகிறது. உலக நாட்டிற்கெல்லாம் மனு நீதிச் சோழனின் நீதி ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக திகழ்கிறது என்றல் மிகையாகது.

## References

Thiruppanandal, (1950) Thiruththodanar Puranam, Kasi Thirumadam, Chennai, India.

Sekkizhar, (2022) Thiruththondar Puranam, Prema Pirasuram, Chennai, India

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License